CC. 417/2022
PW. 3 கனகவேல்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.3.2023.

(1ம் எதிரி இறந்துவிட்டார் 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

குறுக்கு விசாரணை

சுப்பிரமணி அசா.1 எனது தாத்தா ஆவார். நான் குடியிருக்கும் வீடு வேன்ராயர்புரம் பக்கத்தில் உள்ளது. சாமிநத்தத்திலிருந்து வேன்ராயர்புரம் 3 கி,மீ இருக்கும் என்றால் அரை கி.மீ இருக்கும். சம்பவம் இடம் வீடு , இடிப்பதாக கேள்விபட்டு தான் சம்பவம் இடம் வந்தேன் என்றால் சரியல்ல. நான் எனது தாத்தா மற்றம் பாட்டிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சம்பத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, சம்பவத்தின் போது எனக்கு வயது 12 இருக்கும். போலீஸ்பாரட்டிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

CC. 417/2022
PW. 2 பெரியம்மாள்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.3.2023.

(1ம் எதிரி இறந்துவிட்டார் 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

குறுக்கு விசாரணை

நான் சாமிநத்தத்தில் வேன்ராயர்புரம் ரோட்டிற்கு வடபுறம் குடியிருந்து வருகிறேன். எனது பேரன் கனகவேல் சாம்பிராணி கம்பெனியில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். எனது பேரன் சொல்லி தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். சம்பவம் இடம் தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் , ஆர.டி.,ஓ மற்றும் டி.ஆர், ஓ ஆகிய இடங்கள் முன்பு நடைபெற்ற நடவடிக்கைகளுக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்திலிருந்து நான் அன்றை தினம் மல்லி காவல்நிலையம் சென்றேன் என்றால் சரிதான். மல்லி காவல்நிலையத்திற்கு நானும் எனது அண்ணனும் சேர்ந்து தான் சென்றோம் என்றால் சரிதான். நான் சம்பவம் பற்றி கேள்வி பட்டு நேராக மல்லி காவல்நிலையம் சென்றால் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவத்தை பார்த்து பின்பு மல்லி காவல்நிலையம் சென்றேன். நான் சம்பவம் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

CC. 417/2022
PW.1 சுப்பிரமணி

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.3.2023.

(1ம் எதிரி இறந்துவிட்டார் 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

குறுக்கு விசாரணை

பிரச்சினைக்குரிய இடம் வேன்ராயர்புரம் சாமிநத்தம் சாலையின் வடபுறம் உள்ளது. நான் தற்போது குடியிருந்து வரும் இடமானது சம்பவஇடமானது அரை கி.மீ தள்ளி உள்ளது. தற்போது குடியிருக்கும் வீட்டில் சுமார் 10 வருடங்களாக குடியிருந்து வருகிறோம். சம்பவ இடம் எங்களுக்கு சொந்தமானதா அல்லது 1ம் எதிரியின் மனைவியான பெரியம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்பது தொடர்பாக ஆர்.டி.,ஓ அலுவலகத்தில் பட்டா தொடர்பான பிரச்சினை நடந்து கொண்டிருந்ததால் என்றால் சரிதான். பெரியம்மாளுக்கு தான் நிலம் பாத்தியப்பட்டது என்று சொல்லி ஆர்.டி.ஓ அலுவலர் உத்தரவிட்டார் என்றால் சரியல்ல. டி.ஆர.ஓவும் சொத்து எங்களது இல்லை என்று ஆணைபிறப்பித்துள்ளார என்றால் சரியல்ல. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராண்மை மனு சொத்து தொடர்பாக ஆர்.டி.ஓ மற்றும் டி.ஆர. ஓ எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த நீதிப் பேராண்மை மனுவில் நில நிர்வாக கமிஷனரிடம் மேல்முறையீடு செய்ய சொல்லி ஆணையிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். டி.ஆர.ஓ, மற்றும் ஆர்.டி.ஓ பெரியம்மாளுக்கு ஆதரவாக எங்கள் தரப்பில் விசாரிக்காமல் ஆணைபிறப்பிக்கவில்லை எனவே சீராய்வு மனுவை நிலச்சீரிதிருத்த ஆணையரிடம் சமர்ப்பிக்கும் படி உத்தரவிட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் தொடர்பாக நான் மற்றும் இந்த வழக்கின் சாட்சி அழகுசாமி, பொன்னம்மாள், மாரிமுத்து, சண்முகையாபாண்டியன், சரவணன், ஆகியோர்களுக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 313/2007 போடப்பட்டு, இந்த வழக்கு 20.11.2008ம் தேதி தீர்ப்பு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் 3 மாதங்களுக்குள் எங்களை வீடு மற்றம் இடத்தை காலி செய்யுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களுக்கு எதிராக ஆணை பிறப்பித்துள்ளது என்பதால் நாங்கள்

சம்பவம் நடந்த வீட்டை காலி செய்து வேறு வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல. என்னுடன் சேர்ந்த மற்ற பிரதிவாதிகளில் சரவணன் மற்றும் குருவையா சம்பவ இடம் தொடர்பாக அவர்கள் அனுபவித்த இடங்களை பெரியம்மாளிடம் ஆவணம் மூலம் உரிமம் மாற்றியுள்ளார்கள். நான் பெரியம்மாளிடம் சம்பவ இடம் தொடர்பாக பணம் கொடுக்க முடியாது என்பதால் நான் சம்பவ இடத்தை விட்டு விட்டு வேறு இடத்திற்கு குடியிருந்தேன் என்றால் பணம் கொடுக்க முடியவில்லை மற்றும் எதிரிகள் வீடை சுற்றி வேலி போட்டுவிட்டதால் நான் வேறு இடத்தில் வீடு போட்டு குடியிருந்து வருகிறேன். நான் வேறு வீடு கட்டி குடிபோயிவிட்டதால் தான் எதிரிகள் சம்பவ இடம் வீடை சுற்றி வேலி கட்டிவிட்டார்கள் என்றால் சரியல்ல. சம்பவ நாளன்று சம்பவ இடத்திற்கு சட்டப்பூர்வமான உரிமமும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. கடந்த 2008 தீர்ப்பிற்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது கிரிமினல் வழக்கு போட்டு அவர்களை பயம்படுத்துவதற்காக தற்போதைய வழக்கு எதிரிகளின் மீது பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.